# தொழிற் முன்னேற்ற பாதை

# கடைசலர் (டர்னர்)



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- லேத் மற்றும் உபகரணங்களை இயக்குவது, கட்டுப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது போன்ற திறன்கள்.
- வரைபடத்தின் படி பணிப்பொருளை உருவாக்க சரியான திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் திறன் வளர்த்தல்.
- பணிப்பொருளை நன்றாக செய்து முடிக்க தேவையான அளவிடும் கருவிகள், வெட்டுக்கருவிகள் மற்றும் பணிப்பொருளை பிடிக்கும் கருவிகளை தேர்ந்தெடுத்து பயன்படுத்தும் திறன்.
- பல்வேறு வகையான லேத் செயல்பாடுகளை (டர்னிங், துளை பெரியதாக்குதல், மரை வெட்டுதல், இரண்டாக பிரித்தல்) செய்ய தேவையான வெட்டுகருவிகளை கிரைண்டிங் மூலமாக கூர்மையாக்கும் திறன்.
- சிமுலேஷன் மென்பொருள் மூலமாக சிஎன்சி லேத்தினை இயக்குவதற்கான (இயந்திர செயல்பாடுகள், ஜாப் மற்றும் டூல் செட்டிங் போன்ற பல காரணிகள்) பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சிஎன்சி லேத்தினை இயக்கி வரைபடத்தின் படி பொருட்களை உருவாக்கும் திறன்.
- பிறரிடம் தகவல் தொடர்பு கொள்ளும் திறன்

## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- பாதுகாப்பாக வேலை செய்யும் நடைமுறைகள்
- வழக்கமான மற்றும் சிஎன்சி லேத்தினை இயக்க அறிந்திருத்தல்.
- பல்வேறு விதமான காரணிகள் மூலமாக லேத்தின் அலைன்மென்ட் ஐ சோதித்து பிழைகளை சரிசெய்ய அறிந்திருத்தல்.
- இயந்திரங்களில் ஏற்படும் இயக்க பிழைகளுக்கான காரணம் கண்டறிந்து பழுதினை நீக்குதல்.

## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- பணிமனை உதவியாளராக, அரசு ஐடிஐ மற்றும் பொறியியல் கல்லூரிகளில்
- மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் - இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் லிமிடெட், பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட், நெய்வேலி நிலக்கரி சுரங்கம், இந்திய இரயில்வே, ஹெவி வெஹிகிள் பேக்டரி, ISRO, ONGC மற்றும் பல
- தனியார் நிறுவனங்கள் - ஃபோர்ட், ஹூண்டாய், பாட்லிபாய், ,டிவிஎஸ், எல்எம்டபுள்யு, டாட்டா, அசோக் லேலண்ட், மற்றும் பல
- சிறு,குறு,நடுத்தர நிறுவனங்கள்

## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

பயிற்சி இயந்திர ஆப்ரேட்டர், இயந்திரஆப்ரேட்டர், அரை திறனுடைய வேலையாள், தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிமனை உதவியாளர்

### இடை நிலை

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர், சிஎன்சி மெஷின்ஆப்ரேட்டர், முழுத்திறனுடைய வேலையாள் (கிரேடுI,II,III) ஃபோர்மேன், மேற்பார்வையாளர், புரோகிராமர்.

### மூத்த நிலை

இளநிலை பணி மேலாளர், பணி மேலாளர், ஷிப்ட் பொறியாளர், பயிற்சி அலுவலர், சுயதொழில் , தொழில் முனைவோர்.



## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தொழிற்சாலைகளில் தொழிற் பழகுநர் -ஆக சேரலாம்
- ஐடிஐயில் பயிற்றுநராக பணியில் சேருவதற்கு பயிற்றுநர் பயிற்சி மையத்தில் சேர்ந்து (CITS) சான்றிதழை பெறுதல்
- பாலிடெக்னிக் கல்லூரிகளில் முழு நேர மற்றும் பகுதி நேர பட்டயப்படிப்பில் சேரலாம்.
- தேசிய திறன் பயிற்சி மையங்களில் நடத்தப்படும் சிறப்பு குறுகிய கால படிப்புகளில் (ஆட்டோ கேட், புரோ இ, சாலிட் ஒர்க்ஸ், எட்ஜ் கேம்) சேரலாம்.

QUEST ALLIANCE

வாய்மையே வெல்லும்

Industrial Training Institute

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை